# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

********

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

முறையீட்டு மனு எண்: 054/2017/பே .
ஆணை எண். 91/2018 நாள். 28–03–2018

திரு. செ. பாண்டியராஜ்,
த/பெ. செல்லைய்யா,
43/1 , கீழூர் காலனி, மம்சாபுரம் –626 110,
விருதுநகர் மாவட்டம் --- முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
மம்சாபுரம் பேரூராட்சி,
மம்சாபுரம்,
விருதுநகர் மாவட்டம். --- எதிர் மனுதாரர்

## ஆணை

திரு செ. பாண்டியராஜ், த/பெ திரு செல்லைய்யா, கீழூர் காலனி, மம்சாபுரம், முறையீட்டு மனுதாரரின் 11.03.2017ம் நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.03.2017ல் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண் 54/2017 என எண்ணிடப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கைகள் பெறப்பட்டும், உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

முறையீட்டு மனுதாரர் தனது புகார் மனுவில், விருதுநகர் மாவட்டம், மம்சாபுரம் பேரூராட்சியில் சுகா்தார மேற்பார்வையாளர் பணியிடம் நிரப்பியது சம்பந்தமாக, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், மதுரை அவர்களிடம் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட விவரங்களை தனது புகாராக கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மம்சாபுரம் பேரூராட்சியில் காலியாக உள்ள சுகாதார மேற்பார்வையபளர் பணியிடத்திற்கு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட பட்டியலின்படி பலருக்கு 16.09.2016 அன்றைய நேர்காணலுக்கு அழைப்பு அனுப்பியதாகவும், ஆனால் அன்றைய தினம் மம்சாபுரம், சாத்தபெருமாள் தெருவை சேர்ந்த திரு. சிவசுப்பிரமணியன்,

த/பெ வீரன் என்பவருக்கு பணி ஆணை மம்சாபுரம் பேரூராட்சி செயல் அலுவலரால் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் நில ஆர்ஜிதத்தால் பாதிக்கப்பட்ட நில சொந்தக்காரர்களின் வாரிசுகளுக்கு அரசாணை எண்.188/பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத்துறை/நாள்.28.12.2016ன்படி மேற்படி பணியிடம் ஒதுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளதாக தனது மனுவில் தெரிவித்துள்ளார். மேலும் அரசாணை 28.12.2016ல் வெளியிடப்பட்டுள்ள நிலையில் மேற்படி நபர் பணி ஆணை பெற்று 16.09.2016ல் பணியில் சேர்ந்துள்ளதாகவும் இதன் மூலம் மம்சாபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் அரசின் விதிமுறைகளை மீறி தனக்கு சாதகமான மிகவும் தெரிந்த நபரை பணியமர்த்தியிருப்பதாகவும், மேற்கண்ட அறிக்கையின் படி மேற்படி அரசாணை, பணி நியமன நாளன்று வெளியிடப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி மம்சாபுரம் பேரூராட்சியில் காலியாக இருந்த சுகாதார மேற்பார்வையாளர் பணியிடம் தமிழ்நாடு பணியாளர் தேர்வாணைய வரம்பிற்குட்பட்ட பதவி எனவும் மேற்கண்ட பதவியில் பேரூராட்சி செயல் அலுவலர் முறைகேடாக பணியமர்த்தியுள்ளார் இதற்கு உடந்தையாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், மதுரை அவர்களும் செயல்பட்டுள்ளார் எனவும் தெரிவித்து விசாரணை கோரி தனது மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 21.03.2017ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்கண்ட புகார் மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி மம்சாபுரம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

மம்சாபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண்.93/2016/நாள் 10.07.2017ன்படி தனது அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

மம்சாபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில், மம்சாபுரம் பேரூராட்சியில் காலியாக இருந்த சுகாதார மேற்பார்வையாளர் பணியிடத்தினை பூர்த்தி செய்வதற்கு முறையாக நாளிதழில் வேலைவாய்ப்பு தொடர்பாக விளம்பரம் செய்யப்பட்டும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், மற்றும் எல்காட் துறையினரிடமிருந்து தடையில்லா சான்று பெறப்பட்டவுடன், விருதுநகர் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலரிடம் மேற்படி காலியாக உள்ள பணியிடத்திற்கு இன சுழற்சி முறை மற்றும் பதிவு மூப்பு அடிப்படையில் தகுதியான நபர்களின் பட்டியலை அனுப்பிவைக்க கோரப்பட்டதில், வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து 5 நபர்கள் பட்டியல் வரப்பெற்றதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். வரப்பெற்ற பட்டியலில் உள்ள நபர்களுக்கு முறையாக நேர்காணல் அழைப்புக் கடிதம் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பிவைக்ககப்பட்டதாகவும், அதில் நேர்காணல் தேதியன்று பட்டியலில் உள்ள 5 நபர்களில் 2 நபர்கள் மட்டுமே நேரில் ஆஜரானதாக தெரிவித்துள்ளார். அதில் திரு ம. கருப்பைய்யா, 212, வேல்முருக நாடார் தெரு, மம்சாபுரம், தனக்கு சுகாதார மேற்பார்வையாளர் பணியிடம் தேவையில்லை எனவும் இரவு காவல் பணியிடத்திற்கு பரிந்துரை செய்யுமாறு கடிதம் கொடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதில் மற்றொரு நபரான திரு வீ.சிவசுப்பிரமணியம், த/பெ வீரன் 14, சாத்த பெருமாள் செட்டியார் தெரு, மம்சாபுரம் என்பவர் நில ஆர்ஜிதத்தால் பாதிக்கப்பட்ட நில சொந்தக்காரர்கள் வாரிசுதாரர்கள் அரசாணை எண் 188/பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை/நாள்

28.12.1976ன்படி வேலை வாய்ப்பில் முன்னுரிமை பெறப்பட்ட சான்றிதழ் சமர்ப்பித்ததன் அடிப்படையில், திரு.வீ.சிவசுப்பிரமணியன், த/பெ திரு வீரன், 14, சாத்த பெருமாள் செட்டியார் தெரு, மம்சாபுரம் என்பவருக்கு உரிய விதிமுறைகளின்படி பணிநியமனம் செய்து உத்திரவு வழங்கப்பட்டதாகவும், இதில் மனுதாரர் கூறும் வகையில் எவ்வித முறைகேடும் இல்லை, அரசாணைக்கு புறம்பாக எவ்வித செயலும் நடைபெறவில்லை எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதோடு, திரு.செ.பாண்டியராஜன், பணம் பறிப்பதற்காக பொய்யான மனுக்களை அனுப்பி வருவதாகவும் இம்மனுவினை தள்ளுபடி செய்யுமாறும் மம்சாபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 02.08.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மம்சாபுரம் பேரூராட்சி செயல் அலுவலரின் கடித எண் 93/2016/நாள் 10.07.2017ம் நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ள விவரங்கள் குறித்து மேற்படி சுகாதார மேற்பார்வையாளர் பணியிடம் நிரப்பியது குறித்து சில விவரங்களை மம்சாபுரம் பேரூராட்சி ஆவணங்களுடன் சரிபார்த்து உரிய விசாரணை மேற்கொண்டு குறிப்புகளுடன் அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், மதுரை அவர்களுக்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம் 2014 பிரிவு 6 (4) (b) ன் கீழ் ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ 04.08.2017ம் நாளிட்ட அழைப்பாணையில், முறையீட்டு மனுதாரர் தனது புகார் மனு குறித்த விளக்கங்களை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 23.08.2017ல் ஆஜராக ஆணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் மேற்படி விசாரணைக்கு ஆஜராகவில்லை.

மேற்படி முறையீட்டு மனுதாரருக்கு கூடுதல் வாய்ப்பாக இம்முறைமன்ற நடுவத்தில் தனது புகாருக்கான விளக்கத்தினை பதிவு செய்யக் கோரி 16.11.2017ல் ஆஜராகக் கோரி இம்முறைமன்ற நடுவ 08.09.2017ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது. ஆனால் இவ்வாய்ப்பினையும் மனுதாரர் ஏற்று விசாரணைக்கு ஆஜராகவில்லை.

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், மதுரை தனது கடித எண் 42302/2017/பே.2/நாள் 19.10.2017ன் மூலம் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 26.10.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கடித ந.க.எண்.42302/2017/பே.2/நாள் 19.10.2017ல் தெரிவித்துள்ள விவரங்களின் அடிப்படையில் சில கூடுதல் விவரங்களை சமர்ப்பிக்கக் கோரி பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், மதுரை அவர்களுக்கு ஆணையிடப்பட்டது.

மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது கடித ந.க.எண். 42302/2017/பே.2/நாள் 15.12.2007ன் மூலம் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி அறிக்கையில் மம்சாபுரம் பேரூராட்சியில் காலியாக இருந்த துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடத்திற்கான தகுதி வாய்ந்த பட்டியல் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து 12.09.2016ல் பெறப்பட்டு 14.09.2016ல் பட்டியலில் உள்ள நபர்களுக்கு நேர்காணலுக்கான அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டு 16.09.2017ல் நேர்காணல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேர்முகத் தேர்வில் கலந்து கொண்ட நபர்களின் கல்வி மற்றும் பிற தகுதிகள் குறித்தான விவரங்கள் பதிவு செய்யப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மம்சாபுரம் பேரூராட்சியில் 3/2015 முதல் 9/206 முடிய பேரூராட்சி மன்றக் கூட்டம் நடைபெறவில்லை எனவும், ஓராண்டிற்கும் மேலாக பேரூராட்சி மன்றத் தலைவரால் மன்றக் கூட்டம் கூட்டப்படாத நிலையில் மேற்படி பணி நியமனம் தொடர்பாக நியமனக்கூட்டத்திற்கான அறிவிப்பு நியமனக்குழுத் தலைவரால் அனுப்பி வைக்கப்படவில்லை எனவும், பேரூராட்சி தலைவர் மற்றும் நியமனக்குழு உறுப்பினருக்கு பேரூராட்சி செயல் அலுவலர் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டு பணி நியமனம் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப் பிரிவு 73ன்படி நியமனக்கழுக் கூட்டத்தில் நியமனக்குழுத் தலைவர், பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் ஒரு நியமனக்குழு உறுப்பினர் மூலம் கூட்டம் நடத்தி நியமனம் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், மேலும் செயல் அலுவலர் மற்றும் நியமனக்குழு உறுப்பினரால் கூட்டத்தினை நடத்தி பணி நியமனம் மேற்கொண்டு அதன் விவரத்தினை அடுத்து வரும் மன்றக் கூட்டப் பொருளில் சேர்த்து அனுமதி பெறப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே மம்சாபுரம் பேரூராட்சியில் கடந்த ஓராண்டிற்கும் மேலாக மன்றக் கூட்டம் தலைவரால் நடத்தப்படாத நிலையில் காலிப் பணியிடத்தினை பூர்த்தி செய்ய வேண்டிய நிலையில் பணி நியமனம் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது என பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டதாக மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்நியமனம் சம்பந்தமாக பேரூராட்சி செயல் அலுவலர் பேரூராட்சித் தலைவரின் கவனத்திற்கு எந்த தகவலும் கொண்டு செல்லவில்லை எனவும், · இதனால் மேற்படி நியமனக்குழு தலைவர் முன்னிலையில் இந்நியமனம் நடைபெறவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் மேற்படி பணி நியமனம் பற்றிய பொருள் அடுத்து வரும் கூட்டத்தில் நியமனக்குழுத் தலைவரின் ஒப்புதல் பெறப்படவில்லை என பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். அவ்வாறான நியமனக்குழுக் கூட்டத்தினை நடத்துவதற்கு பேரூராட்சி செயல் அலுவலரால் அனுமதி ஏதும் பெறப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

24.10.2016க்கு பின்னர் மேற்படி மம்சாபுரம் பேரூராட்சியில் தனி அலுவலர் மூலம் நியமனக்குழுக் கூட்டம் ஏதும் நடத்தப்படவில்லை எனவும், மேற்படி பணி நியமனம் தொடர்பாக நியமனக்குழு உறுப்பினர் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலரின் அங்கீகாரம் மட்டும் பெறப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சுகாதார மேற்பார்வையாளர் பணியிடம் பேரூராட்சியின் பொது சுகாதார அவசர அவசியத்தினை முன்னிட்டும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஆய்வுக் கூட்டத்தில் மேற்படி காலி பணியிடத்தினை நிரப்ப உரிய விதிமுறைகளை பின்பற்றிட அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்படி காலி பணியிடம் தொடர்பாக நாளிதழ் விளம்பரம் செய்யப்பட்டும், அரக்கோணம் இரும்பு எஃகு தொழிற்சாலை, எல்காட் நிறுவனத்திடமிருந்து தடையின்மை சான்று பெறப்பட்டும் மேற்படி பணியிடத்தினை பூர்த்தி செய்வதற்கு உரிய இன சுழற்சி முறையில் முன்னுரிமை பெற்றவர்களின் பட்டியலை

மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து பெறப்பட்டு, இன சுழற்சி முறையில் முன்னுரிமை பெற்றவரான திரு சிவசுப்பிரமணியன் என்பவரை நியமனக்குழு ஒப்புதல் அளித்ததன் அடிப்படையில் பணி ஆணை வழக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக நடைமுறைகளை முறையாக பின்பற்றப்படாத செயல் அலுவலர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது அறிக்கையில் தெரிவித்து இது சமபந்தமாக மம்சாபுரம் பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு பா. ஜெயசந்திரசேகரன் அளித்துள்ள கடிதத்தினையும் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 28.12.2017ம நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அறிக்கையின் அடிப்படையில் கீழ்கண்ட சில விவரங்களை சமர்ப்பிக்கக் கோரி பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு ஆணையிடப்பட்டது.

1. விருதுநகர் மாவட்டம், மம்சாபுரம் பேரூராட்சியில் காலியாக இருந்த துப்புரவு பணி மேற்பார்வையாளருக்கான தகுதி பட்டியல் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து 12.09.2016ல் பெறப்பட்டு 16.09.2016ல் நேர்முகத் தேர்வு (4 நாட்கள் இடைவெளியில் ) வைக்கப்பட்டமைக்கான காரணங்கள்.
2. நேர்முகத் தேர்வில் கலந்து கொண்ட நபர்களின் தகுதிகளை குறிப்பிடப்படாத நிலையில் எந்த அடிப்படையில் திரு சிவசுப்பிரமணியன் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதற்கான விளக்கம்.
3. இந்நியமனம் குறித்து பேரூராட்சியில் அரசாணைகளின்படி இன சுழற்சி முறை கடைபிடிக்கப்பட்டமைக்கான சான்று.
4. 3/2015 முதல் 9/2016 மாதம் வரை பேரூராட்சி மன்றக் கூட்டம் பேரூராட்சித் தலைவரால் நடத்தப்படாத நிலையில் இது குறித்து செயல் அலுவலரிடமிருந்து பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அறிக்கை வரப்பெற்றதா ? 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரம்.
5. இந்நியமனத்தில் பேரூராட்சியின் செயல் அலுவலர் தெரிவித்துள்ள கருத்தான மன்றக் கூட்டம் நடைபெறாத நிலையில் நியமனக்குழு உறுப்பினர் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரால் நியமனம் மேற்கொள்ளப்பட்டது என்பது சட்ட விதிகளின்படி செல்லத் தக்கதுதானா என்பதற்கான விளக்கம்.
6. 3/2015 முதல் 9/2016 முடிய பேரூராட்சி மன்றத் தலைவரால் மன்றக் கூட்டம் நடைபெறாத நிலையில், தற்போதைய நியமனக்குழு உறுப்பினர் எவ்வாறு தேர்ந்தெடுக்கபபட்டார், எந்த தேதியில் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்ற விவரங்கள்.
7. 16.09.2016ல் நேர்முகத் தேர்வின்மூலம்தெரிவு செய்யப்பட்ட துப்புரவு பணி மேற்பார்வையாளர் நாளது தேதி வரை நியமனக்குழுக் கூடடத்தில் வைத்து ஒப்புதல் பெறப்படாத நிலையில் எந்த அடிப்படையில் பணி ஆணை வழங்கப்பட்டது. மேலும் பேரூராடசிகளின் உதவி இயக்குநரின் ஆய்வுக் கூட்டங்களில் உரிய விதிமுறைகளின்படி நியமனங்கள் மேற்கொள்ளப்பட அறிவுரை வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்நியமனத்தில் நியமன நடைமுறைகள் மற்றும் இதர

விதிமுறைகள் பின்பற்றப்பட்டனவா என்பது குறித்தான விவரங்கள் (ஆவண நகல்களுடன்)

8. இப்பணியிடத்தினை நிரப்பிய செயல் அலுவலர் எந்த தேதியில் பணியில் இருந்து ஓய்வு பெற்றார். அவர் ஓய்வு பெறும் வரை இப்பொருள் சம்பந்தமான விவரம் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லையா? இது குறித்து பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதனைத் தொடர்ந்து மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயககுநர் தனது ந.க.எண்.42302/2014/பே.2/நாள் 23.03.2018ன் மூலம் தனது அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

1. மம்சாபுரம் பேரூராட்சியில் காலியாக இருந்த சுகாதார மேற்பார்வை பணியாளர் பணியிடம் பேரூராட்சியின் பொது சுகாதார நலம் கருதியும் மேற்படி பணியிடத்தின் அவசியத்தின் அடிப்படையிலும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து பட்டியல் பெறப்பட்டவுடன் நேர்முக தேர்வு நடத்துவதகு மேற்படி பேரூராட்சி செயல் அலுவரால் நடைவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் 4 நாட்கள் கால இடைவெளியில் தேர்வு நடத்தப்பட்டமைக்கான காரணம் ஏதும் தெரிவிக்கவில்லை.
2. மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட பட்டியலில உள்ள 5 நபர்களுக்கு நேர்முகத் தேர்வுக்கான அழைப்பாணை அனுப்பியதில் 2 நபர்கள் மட்டுமே கலந்து கொண்டதாகவும் அதில் திரு கருப்பையா என்பவர் தனக்கு இந்த பதவி வேண்டாம் என எழுதி கொடுத்துவிட்டதால் மேற்படி நேர்முகத் தேர்வில் கலந்து கொண்ட மற்றொரு நபரான திரு சிவசுப்பிரமணியன் என்பவர் பணி நியமனத்திற்கு தேர்வு செய்யப்பட்டார் என தெரிவித்துள்ளார். நேர்முகத் தேர்வில் கலந்து கொண்ட நபர்களின் விவரங்கள் பதியப்பட்டமைக்கான விளக்கம் ஏதும் அளிக்கவில்லை.
3. இப்பணியிடம் அரசாணை எண் 142/ பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத்துறை நாள்.14.10.2009ன்படிஇனசுழற்சி முறை கடைபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
4. மம்சாபுரம் பேரூராட்சியில் 3/2015 முதல் 9/2016 முடிய மன்றக் கூட்டம் நடத்தப்படாதது குறித்து பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து அறிக்கை பெறப்பட்டதாகவும், அதன் அடிப்படையில் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு விவரம் தெரிவிக்கப்பட்டு, மன்றக் கூட்டத்தினை நடத்துவதற்கு உரிய விதிமுறைகளின்படி செயல்பட்டு கூட்ட பொருள் தயாரிக்க செயல் அலுவலருககு அறிவுறுத்தப்பட்டதாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், மதுரை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.
5. மேற்படி பணியிடம் நியமனக்குழுத் தலைவரால் நடத்தப்படவில்லை எனவும் 1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப் பிரிவு 73ன்படி மேற்படி நியமனக்குழுக் கூட்டம் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் 17வது வார்டு உறுப்பினர் திரு.ஜெயசந்திரன் என்பவரால் நடத்தப்பட்டதாகவும், இப்பொருள் அடுத்து வந்த எந்த கூட்டப் பொருளிலும் சேர்க்கப்பட்டு ஒப்புதல் பெறப்படவில்லை என தெரிவிக்கப்படடுள்ளது. மேலும் மேற்படி 17வது வார்டு உறுப்பினரும் நியமனக்குழு

உறுப்பினருமான திரு ஜெயசந்திரன் என்றைய தேதியில் நியமனக்குழு உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார் என்பதற்கான விவரம் ஏதும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் தெரிவிக்கப்படவில்லை.

6. மேலும் இந்நியமனத்தில் 1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு 73ன்படி பணி நியமனம் மேற்கொள்ளப்பட்டு அதன் விவரத்தினை அடுத்து வரும் மன்றக் கூட்டப் பொருளில் சேர்க்கப்படவேண்டும் என்ற நடைமுறை பின்பற்றப்படவில்லை எனவும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், மதுரை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

7. இந்நியமனம் மேற்கொண்ட செயல் அலுவலர் திரு பா.ஜெயசந்திரசேகரன் என்பவர் 31.07.2017ல் ஓய்வு பெற்றுவிட்டதாகவும், பேரூராட்சியில் அரசு நிலையாக்கப்படாத பணியியிடங்களுக்கு நியமன அலுவலர் செயல் அலுவலர் எனவும், பணி நியமனம் தொடர்பாக உரிய விதிமுறைகளை பின்பற்றி எவ்வித புகார்களுக்கும் இடமின்றி பணி நியமனம் மேற்கொள்ளப்படவேண்டும் என செயல் அலுவலர்களுக்கு ஆய்வுக் கூட்டங்களில் அறிவுரைகள் வழங்கப்பட்டதாகவும் மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் விருதுநகர் மாவட்டம், மம்சாபுரம் பேரூராட்சி செயல் அலுவலர், மேற்படி பேரூராட்சியில் 3/2015 முதல் 9/2016 முடிய பேரூராட்சி மன்றக் கூட்டம் பேரூராட்சி தலைவரால் நடத்தப்படாத நிலையில் இது தொடர்பாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் உரிய விதிமுறைகளை பின்பற்றிட அறிவுரை வழங்கப்பட்டும்,மேற்படி அறிவுரைகளை செயல்படுத்தியதாக தெரியவில்லை. மேலும் 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 73ன்படி நியமனக்குழு உறுப்பினர் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலரால் பணி நியமனம் மேற்கொள்ள, அப்போதைய நியமனக்குழு உறுப்பினர் எந்த தேதியில் நியமனம் செய்யப்பட்டுள்ளார், அவரின் நியமன காலம் நடைமுறையில் உள்ளதா என்ற விவரங்களை பேரூராட்சியில் செயல் அலுவலர் கவனத்தில் கொண்டதாக தெரியிவில்லை. மம்சாபுரம் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையில் மேற்படி நியமனம் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரையின்படி மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவித்துள்ள நிலையில், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் உரிய விதி முறைகளை பின்பற்றி நியமனம் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவே தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். இந்நிலையில் மேற்படி நியமனம் உரிய விதிமுறைகளை பின்பற்றி நடைபெற்றதாக எந்த ஆவணம் மூலமும் பேரூராட்சி செயல் அலுவலரால் உறுதி செய்யவில்லை. மேலும் மேற்படி நியமனம் 1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டப் பிரிவு 73ன்படி நியமனக்குழுத் தலைவர் இல்லாத நிலையில், பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் நடைமுறையில் உள்ள நியமனக்குழு உறுப்பினர் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், மேற்படி நியமனத்தினை அடுத்து வரும் மன்றக் கூட்டப் பொருளில் சேர்த்து ஒப்புதல் பெற்று அதன் பின்னரே பணி ஆணை வழங்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் இந்நடைமுறைகளை செயல்படுத்த பேரூராட்சி செயல் அலுவலர், மம்சாபுரம் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

எனவே மம்சாபுரம் பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு பா.ஜெயசந்திரசேகரன், மேற்படி சுகாதார மேற்பார்வையாளர் பணியிடம் நிரப்ப தேவையான விதிமுறைகளை கடைபிடிக்கத் தவறியதோடு, இது சம்பந்தமாக எந்த உயர் அலுவலர்களின் அனுமதியினையோ ஒப்பதலையோ பெற தவறியுள்ளார் என்பது பேரூராட்சியின் செயல் அலுவலர் மற்றும் மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அறிக்கையின் மூலம் புலனாகிறது.

எனவே மேற்கண்ட விதிமீறிய பணி நியமனத்திற்காகவும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அறிவுரைகளின்படி செயல்படத் தவறியும், விதிமுறைகளை கருத்தில் கொள்ளாமலும் பணி நியமனம் மேற்கொண்ட மம்சாபுரம் முன்னாள் பேரூராட்சி செயல் அலுவலர் திரு பா.ஜெயகந்திரசேகரன் என்பவர் மீது துறை ரீதியான நடவடிக்கைகள் மேற்கொண்டிட பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரைத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018 ம் ஆண்டு மார்ச்த் திங்கள் 28-ஆம் நாளன்று என்னால் கையாப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–

செயலாளர். 16/4/18

14/4/18

பெறுநர்

1.திரு. செ. பாண்டியராஜ்,
த/பெ. செல்லைய்யா,
43/1 , கீழூர் காலனி, மம்சாபுரம் –626 110,
விருதுநகர் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
மம்சாபுரம் பேரூராட்சி,
விருதுநகர் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
மதுரை மண்டலம்.
மதுரை – 20

4.பேரூராட்சிகளின் இயக்குநர்,
குறளகம்,
சென்னை – 108.